



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.10.2025) சென்னை நேரு உள்விளையாட்டரங்கில் நடைபெற்ற 2025 முதலமைச்சர் கோப்பை இ–ஸ்போர்ட்ஸ் விளையாட்டுப் போட்டியை பார்வையிட்டார். இந்நிகழ்வில் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.10,2025) தமிழ்நாட்டில் முதல்முறையாக சென்னை நேரு விளையாட்டு அரங்கில் கூடைப்பந்து விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் சர்வதேச தரத்தில் பயிற்சி மேற்கொள்ளும் வகையில் 14.72 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள அதிநவீன தானியங்கி கூடைப்பந்து பயிற்சி இயந்திரத்தை தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் அரசு அலுவலர்கள் மற்றும் விளையாட்டு வீரர்கள் உடனிருந்தனர்.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.10.2025) சென்னை நேரு உள்விளையாட்டரங்கில் நடைபெற்ற 2025 முதலமைச்சர் கோப்பை இ–ஸ்போர்ட்ஸ் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற விளையாட்டு வீரர்களுக்கு பதக்கம் அணிவித்து, மொத்தம் 9,75,000 க்கான பரிசுத் தொகை காசோலைகள், சான்றிதழ் மற்றும் வீரன் நினைவுச் சின்னம் வழங்கி பாராட்டினார். இதில் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

## உதகை பழங்குடியினர் பண்பாட்டு மையம் சார்பில்

# மாவட்ட அளவிலான சுகாதார பேரவை கூட்டம்!

## தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன் சிறப்புரை!

உதகை, அக். 14 -

முதல்வர் தளபதி அவர்களின் நல்லாட்சியில், நீலகிரி மாவட்டம், உதகை பழங்குடியினர் பண்பாட்டு மையத்தில், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறையின் சார்பில் நடைபெற்ற மாவட்ட அளவிலான சுகாதார பேரவை கூட்டத்தினை, அரசு தலைமைக்கொறடா கா.ராமச்சந்திரன், மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு ஆகியோர் தொடங்கி வைத்தனர்.



இக்கூட்டத்தில், அரசு தலைமைக் கொறடா தெரிவித்ததாவது: -

முதலமைச்சர் அவர்கள் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு திட்டங்களை தீட்டி சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகிறார்கள். ஒரு நாட்டின் வளர்ச்சி கல்வி மற்றும் மருத்துவம் ஆகும். எனவே கல்வி மற்றும் மருத்துவத் துறையினை மேம்படுத்தும் வகையில் அதிக அளவில் நிதி ஒதுக்கீடு அரசால் செய்யப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டத்தில் குன்னூர் அரசு மருத்துவமனை, கோத்தகிரி அரசு மருத்துவமனையில் கட்டமைப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

மேலும், உதகை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை என்பது நீலகிரி மாவட்டத்திற்கு கிடைத்த ஒரு மைல் கல் ஆகும். நோயாளிகளுக்கு தேவையான அனைத்து வசதிகளும் இம்மருத்துவமனையில் உள்ளது. இம்மருத்துவமனைக்கு 1500க்கும் மேற்பட்ட வெளிப்புற நோயாளிகள் வந்து சிகிச்சை பெற்று செல்கின்றனர். குறிப்பாக, மருத்துவர்கள், மருத்துவ பணியாளர்கள் நோயாளிகளிடம் அன்பாக நடந்து கொள்ள வேண்டும்.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறையின் சார்பில் ஒவ்வொரு ஆண்டும் சுகாதார பேரவை கூட்டம் நடத்தப்படுகிறது.

அதனடிப்படையில் இன்றைய தினம் 2024 - 2025ஆம் ஆண்டிற்கான மாவட்ட சுகாதார பேரவை கூட்டம் இன்று முழுவதும் நடத்தப்பட்டு அனைத்து வட்டாரம் மற்றும் துறைகளில் சுகாதாரத்துறை மேம்பட தேவையான கட்டமைப்பு வசதிகள், மருத்துவ உபகரணங்கள், போக்குவரத்து வசதி போன்றவை குறித்து ஆலோசிக்கப்பட்டு, பரிந்துரை செய்யப்பட்டு, மாவட்ட அளவிலேயே சரி செய்யக் கூடியவை, மாநில அரசு உதவியுடன் சரி செய்ய கூடியவை மற்றும் சுகாதார பேரவை மூலம் சரி செய்யக்கூடியவை என பிரிக்கப்பட்டு, மாநில பேரவைக்கு அனுப்பி வைக்கப்பட்டு மாநில பேரவையில் முதலமைச்சர் அவர்கள் முன் திட்ட அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டு பரிசீலனை செய்யப்படவுள்ளது.

எனவே அனைவரும் தங்களுக்கு தேவையான தேவைகளை தெரிவிக்க வேண்டும்.

இவ்வாறு அரசு தலைமைக் கொறடா தெரிவித்தார்.

இதில் உதகை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.ஸ்ரீசரவணன், இணை இயக்குநர் (மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்) மரு. ராஜசேகரன், துணை இயக்குநர் (சுகாதார பணிகள்) சோமசுந்தரம், நகர்மன்ற தலைவர்கள் திருமதி. வாணீஸ்வரி (உதகை), திருமதி பரிமளம் (கூடலூர்) உட்பட அரசுத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



கரூர் சட்டமன்றத் தொகுதி கரூர் ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் ரூ.4.85 கோடி மதிப்பிலான புதிய அரசு திட்ட பணிகளை கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி, கரூர் மாவட்ட ஆட்சியர் மீ. தங்கவேல் தலைமையில் தொடங்கி வைத்தார்.



கோவை மாநகர் மாவட்டம், கோவை தெற்கு சட்டமன்றத் தொகுதி, புலியகுளம் பகுதியில் எரோ சிலம்பாட்ட அகாடமி நிறுவனர், மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் ரா.அர்ச்சுணன் ஏற்பாட்டில் நடைபெற்ற மாபெரும் சிலம்பப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு கோப்பைகளை கோவை மாநகர் மாவட்ட பொறுப்பாளர் துரை.செந்தமிழ்செல்வன் வழங்கினார். இதில் மாவட்டத் துணைச் செயலாளர்கள் கோட்டை அப்பாஸ், கல்பனா செந்தில், கழக தீர்மானக் குழுச் செயலாளர் ஏ.பி.நாகராஜ், வழக்கறிஞர் இரா.ராஜீவ் காந்தி, டாக்டர் மகேந்திரன், தமிழ்ச்செல்வன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# பொறையாரில் நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட மருத்துவ முகாம்!

## மாவட்டச் செயலாளர் நிவேதா எம்.முருகன் – ஆட்சியர் எஸ்.ஸ்ரீகாந்த் தொடங்கி வைத்தனர்!

மயிலாடுதுறை, அக். 14 -

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி பேரூராட்சிக்குட்பட்ட பொறையாரில் உள்ள நிவேதா மெட்ரிகுலேஷன் பள்ளி வளாகத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட மருத்துவ முகாமினை மாவட்ட ஆட்சியர் எஸ்.ஸ்ரீகாந்த், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் ஆகியோர் தொடங்கி வைத்து நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

முகாமில் ஒரே இடத்தில் பொது மருத்துவம்,பொது அறுவை சிகிச்சை மருத்துவம்,இருதய மருத்துவம், எலும்பியல் மருத்துவம், நரம்பியல் மருத்துவம், தோல் மருத்துவம், காது மூக்கு மற்றும் தொண்டை மருத்துவம், மகப்பேறு மருத்துவம், இயன்முறை மருத்துவம்.பல் மருத்துவம், கண் மருத்துவம்,மன நல மருத்துவம், குழந்தைகள் மருத்துவம், துரையீரல் மருத்துவம் ஆகிய மருத்துவ சேவைகள் மற்றும் ஆலோசனைகள் வழங்கப்படுகிறது.

அதுமட்டுமில்லாமல் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்ட அடையாள அட்டை, தூய்மை பணியாளர்களுக்கான அடையாள அட்டை, மாற்றுத்திறனாளிகளுக்கான அடையாள அட்டை போன்றவைகள் பெறுவதற்கு அனைத்து வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதுவரை மயிலாடுதுறை மாவட்டத்தில் 10 நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு, அதில் 11085 நபர்களுக்கு மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நிகழ்ச்சியில் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.எம்.சித்திக், தலைமைச் செயற்குழு உறுப்பினர் முத்து. மகேந்திரன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் பி.எம்.அன்பழகன், எம். அப்துல் மாலிக், அமிர்த. விஜயகுமார், பொதுக்குழு உறுப்பினர்கள் நத்தம் ஏ. வின்செண்ட், ஜெ.கபிலன், தரங்கம்பாடி பேரூராட்சி தலைவர் சுகுண சங்கரி குமரவேல், தரங்கம்பாடி பேரூராட்சி துணைத்தலைவர் பொன்.இராஜேந்திரன், கழக நிர்வாகிகள் சடகோபன், கருணாநிதி, இளங்கோவன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் சக்திவிஜய் மற்றும் அரசு அலுவலர்கள், மருத்துவர்கள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியத்தில் முதலமைச்சரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் சார்பில் வடகாடு ஊராட்சியில் ரூ.32.46 லட்சம் மதிப்பீட்டில் மாங்குடிப்பட்டியில் புதிய தார்ச்சாலை அமைக்கும் பணியினை பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் 11.10.2025 அன்று அடிக்கல் நாட்டி, துவக்கி வைத்தார்.